கட்டுதல் போன்ற இரண்டாவது கட்ட பணிகளை மேற்கொள்ள ரூ.161.30 லட்சம் பெறுமானமுள்ள திட்டத்திற்கு அரசு சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளது. இப்பணிகள் முடிவடைந்தவுடன் மூன்றாவது கட்டப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

[முற்பகல் 9-50]

திரு. கே. சௌந்திரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியில் குடிநீர் மேம்பாட்டுக்காக, 360 லட்சம் ரூபாய் செலவில் திட்டம் போட்டிருப்பதாகவும் 130 லட்சம் ரூபாய் அளவுக்கு வேலைகள் முடிந்துள்ளதாகவும் அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். அதற்காக என் நன்றியை தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். திருச்சி நகரத்தில் தண்ணீர் தட்டுப்பாடு அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. இப்போது 130 லட்சம் ரூபாய் செலவு செய்து பல தொட்டிகள் கட்டப்பட்டிருந்தாலும் தொட்டிகளிலிருந்து தண்ணீர் வருவதில்லை. ஆகவே விரைந்து காரியங்களை முடிக்கும் ஆற்றல் படைத்த அமைச்சர் அவர்கள், இந்த குடிநீர் திட்ட வேலைகளை அனைத்தையும் விரைந்து முடிப்பதற்கும், திருச்சி நகர மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு அமைச்சர் அவர்கள் விரைந்து செயல்படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தொட்டிகளில் தண்ணீர் சரியாக வருவதில்லை என்பதை அறிந்து தான் 'இன்டர்னல் பைப் லைன்' போடுகின்ற வேலையும் நடந்து கொண்டிருக்கிறது. இது ஃபேஸ் 1, 2, 3 என்ற முறையில் வேலைகள் எடுக்கப்பட்டு விரைவில் முடிந்துவிடும், அதன்பின்னால் தொட்டிகளிலும் சரியாக தண்ணீர் வரும். மேலும் ஒரு நல்ல செய்தியை தெரிவிக்க விரும்புகிறேன். இப்போது கொடுக்கப்படும் தண்ணீர் போதாது என்று 5 எம்.ஜி.டி. அளவுக்கு மேலும் தண்ணீர் வழங்க ஒரு திட்டத்தை தயாரிக்க ஆய்வு நடத்தப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிச்சி ஊராட்சிக்கு சிறுவாணி நீர்.

*வினா எண். 153 திரு. க. மருதாசலம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சிறுவாணி தண்ணீர் வழங்கும் திட்டத்தை கோவை மாவட்டத்திலுள்ள "குறிச்சி ஊராட்சி" வரைநீட்டித்து தரும் செயற்குறிப்பு ஏதும் அரசிடமுள்ளதா?

(ஆ) ஆமெனில் அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:—

(அ) ஆம்

(ஆ) ரூ.104.32 லட்சத்திற்கான திட்டமொன்றுக்கு அரசு நிர்வாக அனுமதி அளித்துள்ளது. விரைவில் வேலை தொடங்கப்படும்.

1979 நவம்பர் 8]

திரு. க. மருதாசலம்: பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வரும் கோவை நகரத்திற்கும், அதை சுற்றியுள்ள கிராமங்களுக்கும் பயன்படுகின்ற அளவில் இருக்கின்ற இந்த சிறுவாணித் திட்டத்தின் துவக்க விழா எப்போது நடைபெற உள்ளது? இதனால் எத்தனை மக்கள் பயன்அடைவார்கள்? இத்திட்டத்தில் 10 ஆயிரம் மக்கள் கொண்ட குறிச்சி ஊராட்சிக்கும், 11 ஆயிரம் மக்கள் கொண்ட வெள்ளலூர் பேரூராட்சிக்கும், 12 ஆயிரம் மக்கள் கொண்ட இருகூர் பேரூராட்சிக்கும் தண்ணீர் வழங்குவதற்கு இத்திட்டத்தில் சேர்க்க முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, குறிச்சி ஊராட்சிக்கு 104.32 லட்சம் ரூபாய் அளவில் ஒரு திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது என்று குறிப்பிட்டேன். மேலும் இத்திட்டத்தில் 15 டவுன் பஞ்சாயத்துகளும் 5 வில்லேஜ் பஞ்சாயத்துகளும் இணைக்கப்பட்டிருக்கின்றன. 15 ப்ளஸ் 5 20 பஞ்சாயத்துகளுக்கு இத்திட்டம் பயன்படும். இதற்கான வேலைகள் எல்லாம் இன்னும் ஓராண்டு காலத்திற்கும் முடிந்து விடும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. இப்போது 860 மீட்டர் உயரத்தில் சிறுவாணி அணை கட்டப்பட்டுவிட்டது. கேரள முதல்வரும், தமிழக முதல்வரும் சேர்ந்து இந்தத் திறப்பு விழாவில் கலந்து கொள்ளக்கூடிய வகையில் திறப்பு விழா நடத்த வேண்டும். அதற்கு வேண்டிய தேதியை நிச்சயப்படுத்துகின்ற முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறேன்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, சிறுவாணி குடிநீர் திட்டத்தின் மூலம் கோவை நகரில் போதிய அளவுக்கு தண்ணீர் கிடைக்காது என்ற நிலை இருந்து கொண்டிருக்கும் நேரத்தில் அங்கு பல உப டாங்குகளை கோவை நகரில் நிர்மாணித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த வேலைகளை துரிதமாக முடிப்பதற்கு ஏதாவது ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதா? எப்போது இந்த வேலைகள் முடிவு அடையும் என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: ''இன்டர்னல் பைப் லைன்ஸ்'' பற்றி சொல்லுகிறீர்கள் என்று நினைக்கிறேன்.

திரு. கு. ரமணி: கோயம்புத்தூர் நகரில் பல சப் டாங்குகள் 6, 7 டாங்குகள் கன்ஸ்ட்ரக்ஷன் நடந்து கொண்டிருக்கிறது. இவைகளை கட்டி முடித்தால் தான் குடிதண்ணீர் கஷ்டம் தீரும். ஆகவே இதை துரிதமாக கட்டி முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: நான் ஏற்கனவே குறிப்பிட்டவாறு 15 டவுன் பஞ்சாயத்துகளுக்கான, வேலை, 5 வில்லேஜ் பஞ்சாயத்துகளுக்கான வேலை அத்துடன் இப்போது 860 மீட்டர் சிறுவாணி அணையில் கட்டியிருப்பது, இன்னும் 30 அடி கட்டப்படவேண்டிய வேலை எல்லாம் இன்னும் ஓராண்டு காலத்திற்குள் முடிந்து விடும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

திரு. ஆ. நடராசன்: பேரவைத் தலைவர் அவர்களே, சூறிச்சி பேரூராட்சி ஒன்றியத்தில் இந்தத் திட்டத்தினால் பலன் பெறும் மக்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா? அதைப்போல், 1980 ஆம் ஆண்டு நிறைவேற்றப்படும் என்று சொல்லுகின்ற காரணத்தினால். அந்தப் பகுதியில் இன்னும் வேலை ஆரம்பிக்கப்படவில்லை. அதை விரைவில் ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு என்னிடம் தகவல் இல்லை. விரைவில் வேலை தொடங்கப்படும் என்று சொல்லியிருக்கிறேன். மிக விரைவில் வேலை தொடங்க ஏற்பாடு செய்கிறேன்.

திரு க. மருதாசலம்: பேரவைத் தலைவர் அவர்களே, அப்படித் துவங்கப்படுகின்ற கிராம பஞ்சாயத்துக்கள் எந்தெந்த பஞ்சாயத்துகள் என்பதை அறிவிப்பதானால், அது நீண்ட பட்டியலாக இருக்கும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவைகளை அவை உறுப்பினர்களுக்கு அனுப்பினால் நலமாக இருக்கும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, அனுப்பி வைக்கிறேன்.

திரு ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கக்கூடிய நேரத்திலே. 15 டவுன் பஞ்சாயத்துக்களுக்கும், 5 கிராமப் பஞ்சாயத்துக்களுக்கும் இத்திட்டம் விஸ்தரிக்கப்படும் என்று அறிவித்தார்கள். இத்திட்டத்திற்குள் சின்னவேடம்பட்டி நகர பஞ்சாயத்தும், சிரவணம்பட்டி நகர பஞ்சாயத்தும் உள்ளடங்கி இருக்கிறதா? உள்ளடங்கி இல்லையென்றால், அது உள்ளடங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் அனுப்பி வைக்கின்ற பட்டியலில் திட்டம் உள்ளடங்கி இருக்கின்றதா, இல்லையா என்பதைப் பார்த்து, இல்லையென்றால் மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

தர்மபுரி மாவட்டத்தில் பேருந்து வழித்தடங்கள் நாட்டுடைமையாக்கல்.

*வினா எண்154—டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

நீலகிரி மாவட்டம் போல் தருமபுரி மாவட்டத்தின் போக்குவரத்து வழித்தடங்கள் முழுவதையும் அரசே ஏற்க ஏதேனும் செயல்திட்டம் உள்ளதா?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்) 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயணிப் பேருந்துகள் ஒப்பந்த பேருந்துகள் (கையகப்படுத்துதல்) சட்டத்தின் மீது டெல்லி உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பைப் பொறுத்து நடவடிக்கை எடுக்கப்படும்..